20..3..2019. i
அசல் வழக்கு எண் 257-2010.

வா.சா.2 ராமசாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜாராகி
குறுக்கு விசாரணை

என் அப்பாவுக்கு 2 ஆண். என் அப்பாவுககு சொத்து உள்ளது. அப்பா சொத்து மேலகோட்டை கிராமத்திற்கு வடக்கே உள்ளது. சொத்தின் சர்வே நம்பர் பட்டா நம்பர் தெரியாது. ் தாவா சொத்துக்கு பாத்தீயபட்ட ஆவணம் நான் பார்த்தது கிடையாது. தாவா சொத்துக்கான சர்வே நம்பர் எனக்கு தெரிந்திருக்க வாய்பில்லை ஏ்னறால் சரியல்ல. வாதி சொல்லிகொடுத்தன் பேரில் நான் தாவா சொத்தின் சர்வே நம்பர் தெரியும் என்றால் சரியல்ல. என் சொத்தினை 20 வருடத்திற்கு முன்பு சோப்பு கம்பெனிக்கு கிரையம் கொடுத்திருந்தேன். இது தவிற வேறு சொத்து உள்ளது அதன் சர்வே நம்பர் தெரியாது. தாவா சொத்துக்கு வடக்கே உள்ளதை வக்கீல் ராமசாமிக்கு கொடுதது விட்டேன் ்அதன் பட்டா நம்பர் சர்வே நம்பர் தெரியாது. தாவா சொத்துக்கு அருகே இடம் உள்ளது என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் ்இடம் ்இல்லாததால் தான் நான் அப்படி தாக்கல் செய்யவில்லை ஏ்னறால் சரியல்ல எனக்கு 76 வயதாகிறது அதனால் காடு கரைக்கு போக முடியாது ஏ்னறால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியும் என்று சொல்வது தவற ஏ்னறால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீகபாத்தியம் என்று சொல்வது பொய் ஏ்னறால் சரியல்ல அப்படி பூர்வீக பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை மெர்சியம்மாளுக்கு ஒத்தி வைத்தார்கள் என்றும் அதனை மெர்சியம்மாளும் அவர் கணவரும ்ஒத்தி தாரர் என்ற அடிப்படையில் அனுபவித்து வந்தார்கள் ஏ்னறால் ஆமாம். அதனால் பெருமாள் பெயரில் ்பட்டா வந்தது என்றும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.